புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

==========================================================================

**வள்ளுவர் காட்டும் மனைமாட்சி**

==========================================================================

**ஆய்வாளர்**
**ச.ஜோஸ்பின் அருள் ஜோதி**,
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*அழகப்பா அரசு கலைக் கல்லூரி,*
*காரைக்குடி.*

**நெறியாளர்**
**முனைவர் அ.பாரதி ராணி,**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*அழகப்பா அரசு கலைக்கல்லூரி,*
*காரைக்குடி.*

==========================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*பதிணெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் முதன்மையாக விளங்கும் திருக்குறளில் "மனைமாட்சி" என்பதனை விளக்கும் விதமாக, இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம் போன்றவற்றின் சிறப்பினை தொன்று தொட்டு நம் இலக்கண, இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. நன்னூலாரின் நம்பியக் பொருள் "கற்பியல்" என்ற பிரிவில் இக்கருத்துக்களை வலியுறுத்துகிறது. இவ்விதத்தில் ஆராய்ந்தால் அறம் செய்வதற்கான சிறந்த களம் இல்லறம் எனவும்,இல்லறத்தில் இல்லாத ஒரு பெண்ணோ, ஆணோ அறம் செய்வதற்கு ஏற்றவர் அல்லர் என்ற கருத்தினை சிலப்பதிகாரத்தில் கோவலனை பிரிந்திருந்த கண்ணகி கோவலனின் பிரிவுக்காலங்களில் தான தர்மங்களை செய்ய முடியவில்லை என வருந்தியதன் மூலம் அறிகின்றோம். எனவே அறம் செய்வதன் பொருட்டு இல்லறம் சிறப்பாகப் போற்றப்பட்டது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற வரிசையிலும், இல்லறக் கடமைகளை நிறைவேற்றிய பின்னரே வீடு பேற்றினை அடைவதற்குரிய துறவினை நம் முன்னோர் மேற்கொண்டார். எனவே இல்லறமே நல்லறம் என்பதனை எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**திருக்குறளின் நோக்கம்**

*ஆரியத்தாலும், சமயத் துறைகளாலும் தமிழகத்திற்கு ஏற்பட்ட எல்லாக் கேடுகளும், பாடுகளும், துன்பங்களும், தொல்லைகளும் நீங்கி எல்லோரும் இன்பமாக வாழ வேண்டுமென்னும் இன்னருள் நோக்கங் கொண்டே தெள்ளிமென்னும் ஒள்ளிய அறிவும், திண்ணிய நெஞ்சும், நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் என்பது மொழிஞாயிறு பேராசிரியர் ஞா.தேவநேயப்பாவாணரின் கருத்தாகும். இவ்வுலகம் நன்முறையில் இயங்க இன்றியமையாத பண்புகளான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற் பொருளையும் விளக்கமாகக் கூறுவது திருக்குறளின் சிறப்பாகும். அந்நூல் பாடுபட்டின்படி அறம், பொருள், இன்பம், வீடு என்ற வரிசையில் முதலாவதாக இடம்பெறுவது அறம். அறத்தை கடைபிடிக்கும் இருவாழ்க்கைப் பகுதிகளையும் கூறும் பெரும்பகுதி அறத்துப்பால் இவ்வறத்துப்பாலில் இடம்பெற்றுள்ள இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு என்ற அதிகாரங்களை இணைத்து "வள்ளுவர் காட்டும் மனைமாட்சி" என்னும் தலைப்பில் கட்டுரையாக சமர்ப்பிக்கின்றேன்.*

**இல்வாழ்க்கையின் சிறப்பு**

*இல் - என்பது ஆகுபெயர். இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தோடு கூடி வாழ்பவன் என்பது பொருள். கணவன்- மனைவி பிள்ளைகள் இணைந்து வாழும் ஓர் இடமே 'இல்லம்' எனப்படுகிறது. அந்த இல்லத்தில் நடத்தப்படும் வாழ்க்கை இல்வாழ்க்கை (இல்லம் + வாழ்க்கை) எனப்பட்டது. இந்த இல்வாழ்க்கையின் மூலம் ஒவ்வொரு மனிதனும் செய்யும் அறம் இல்லறம் (இல்லம் + அறம்) எனப்பட்டது. எனவேதான் வள்ளுவர்,*

**“துறந்தார்க்கும் துல்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை”** *(குறள். 43)*

*துறவிகளுக்கும், வறுமையில் பட்டினி கிடப்போருக்கு எவ்வித ஆதரவும் இன்றி இறந்து கிடப்போருக்கும், ஞானிகளுக்கும் இல்லறம் நடத்துபவனே துணையாவான் என்கிறார் வள்ளுவர். ஒரு இல்வாழ்க்கையை நடத்தும் தலைவன் தலைவியே எல்லோருக்கும் துணையாய் பொருளுதவி செய்யும் பண்பினையுடையவராய் இருக்க முடியும் என்றார் வள்ளுவர். அதேபோல்,*

**“தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு**

***ஐம்புலத்து ஆறுஓம்பல் தலை"*** *(குறள். 43)*

*காலம் சென்ற தன் மூதாதையர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் தான் (தன்னுடைய மனைவி, பிள்ளைகள்) என்ற ஐந்து வகையினருக்கும் தான் ஆற்ற வேண்டிய கடமைகளை தவறாது ஆற்றுதல் இல்லறத்தானுக்கு சிறந்த அறச்செயல் எனவே இவற்றை தவறாது செய்தல் ஒரு இல்லறத்தானின் கடமை என வள்ளுவர் சுட்டுகிறார்.*

***"அன்பு அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது"*** *(குறள். 45)*

*இல்லறம் நன்றாக நடத்துவதற்கு முதன்மையாகக் கொள்ள வேண்டியது அன்பு. பின்பு அந்த அன்பின் இணைந்த அறம். இந்த அன்பும் அறமும் ஒருங்கே ஒருவரிடம் அமையுமானால் அவனே உலகில் எல்லா சிறப்புக்களையும் அடைய முடியும் என்கிறார்.*

*இதனை ஆசாரக்கோவை,*

***"கலியாணம் தேவர் பிரிதிர்விழா வேள்வி என்று***
***ஐவகை நாளும் இகழாது அறம் செய்க***
***பெய்க விருந்திற்கும் கூழ்" ( ஆசார. 48)***

*அறம் செய்வதற்குரிய சிறந்த நாளாக திருமண நாளைக் குறிப்பிடுகிறது. மேலும்*

***"கொண்டான் வழி ஒழுகல் பெண்மகன் தந்தைக்கு***
***தண்டான் வழி ஒழுகல்" ( சிறுபஞ். 13)***

*தன்னை மணந்த கணவன் சொற்படி மனைவி நடத்தல் வேண்டும். அப்போது இல்லறம் சிறக்கும் எனச் சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகின்றது.*

***"தாரம் மாணாதது வாழ்க்கை அன்று" (முதுமொழி. 5:2)***

*மனைவியோடு கூடிய மாட்சிமைப்படாத இல்வாழ்க்கை நல்ல இல்வாழ்க்கை ஆகாது என்று முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகிறது. இவ்வாறு இல்வாழ்க்கையின் சிறப்புக் குறித்து ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி போன்ற நூல்களும் எடுத்துக் கூறுகின்றன.*

**வாழ்க்கைத் துணையின் சிறப்பு**

*இல்லறத்தானின் வாழ்க்கைத் துணையாகிய கற்புடை மனைவியின் சிறப்புக்களை வாழ்க்கைத் துணைநலம் என்ற பகுதியின் மூலம் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். மனைவி 'அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்பார் போல் ஓர் இல்லறத்திற்குச் சிறப்பு கற்புடை மனைவியும், அறிவுடைய பிள்ளைகளுமே ஆகும். எனவே தான்,*

***"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்***
***வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"*** *(குறள். 51)*

*மனைவியானவள் விருந்தினரைப் பேணுதல் ஏழைகளிடம் அன்பு செலுத்துதல் போன்ற நற்குணங்களை பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சுவையான உணவு தயாரிக்கும் முறையை அறிந்து கணவன் வருவாய்க்கேற்ப வாழும் முறையையும் அறிந்தவளே கணவனுக்கு ஏற்ற துணைவியாவாள் என மனைவியின் அடையாளத்தினை வள்ளுவர் கூறுகின்றார்.*

***"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை***
***எனைமாட்சி தாயினும் இல்"*** *(குறள். 52)*

*குடும்பத்திற்கு அழகு சேர்ப்பாள் மனைவி. ஒரு குடும்பத்தின் பெருமை புகழ் யாவும் மனைவியையே சேரும். எனவே குடும்ப நிலையை அறிந்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ளும் மனைவி என்றால் அந்தக் குடும்பம் நல்ல பெருமையும் அழகும் பெற்று இனிதாய் விளங்கும் என்கிறார் வள்ளுவர்.*

***"பெண்ணிற் பெருந்தக்க யாஉள கற்பென்னும்***
***திண்மைஉண் டாகப் பெறின்"*** *(குறள். 54)*

*பெண்ணின் பெருமைகள் பலவற்றிலும் அவனிடம் சிறந்தது அவளது கற்பு. அதனை நெறிதவறாமல் மன உறுதியுடன் காத்தலே பெண்ணின் பெருமையாகும். அதனைப் போற்றிப் பாதுகாப்பவள் மிகவும் வலிமை உடையவளாகக் கருதப்படுகிறாள் என்பது வள்ளுவரின் வாக்கு.*

***"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதுஎழுவாள்***
***பெய்எனப் பெய்யும் மழை"*** *(குறள். 55)*

*வேறு தெய்வங்களைத் தேடி அலையாமல் தன் கணவனையே தெய்வமாகக் கருதி வாழும் மனைவி நினைத்தால் இயல்பாக பெய்யும் மழையை வேண்டும் பொழுது பெய்விக்கச் செய்ய முடியும் இதுவே கற்புடை பெண்ணின் பெருமை என வள்ளுவர் கூறுகிறார்.*

***"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற***
***சொற்காத்துச் சோர்விலாள் பெண்"*** *(குறள். 56)*

*ஒரு பெண் தன்னுடைய விலைமதிப்பற்ற கற்பைத் தானே காத்து தன் கணவனைக் கண்போல் பாதுகாத்து அவனது நற்பெயரையும் அழியாமல் காத்து சோர்வு இல்லாமல் விழிப்புடன் செயல்படும் மனைவியே நல்ல பெண் என்கிறார் வள்ளுவர்.*

***"புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்***
***ஏறுபோல் வீடு நடை"*** *(குறள். 59)*

*கற்பில் சிறந்த மனைவியைப் பெற்றிராத கணவன் தன் பகைவர் முன் சிங்கம்போல் நிமிர்ந்து நடந்து செல்ல முடியாது. நாலு பேர் கூடியுள்ள வீதியில் ஓர் ஆடவன் மார்பு விரிந்து தலைகுனியாமல் பெருமையாக நடக்கக் காரணமாக அமைபவள் கற்புடைய மனைவியே எடுத்துரைக்கின்றார் வள்ளுவர்.*

***"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்***
***நன்கலம் நன்மக்கட் பேறு"*** *(குறள். 60)*

*ஒரு குடும்பத்தில் மனைவியை போன்ற மங்கலம் பெரிதொன்றும் இல்லை. அத்தகைய மங்கலத்திற்கு மங்கலமாக விளங்குவது நல்ல பிள்ளைகளைப் பெறுதலாகும். நல்ல மனைவியும், நல்ல பிள்ளைகளும் வாய்ப்பது அழகுக்கு அழகாக அமையும் என்று கூறி வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் மனைவியின் பெருமை, மனைவியின் வலிமை, மனைவிக்கு அழகு தரும் பண்பு, கற்புடைய மனைவியின் சிறப்பு, நல்ல பெண்ணின் அடையாளம் போன்றவற்றை வலியுறுத்துகிறார்.*

*''ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்*
*நீர் அறிந்து ஒழுகாதான் தாரம் அல்லள்''* *(முதுமொழி. 5: 1)*

*ஓசை மிகுந்த கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்திலுள்ள மக்கள் எல்லோருக்கும் தன் கணவன் இயல்பறிந்து நடக்காதவள் மனைவி அல்லள் என முதுமொழிக்காஞ்சி இயம்புகின்றது.*

*''கற்புடைய பெண் அமிர்து; கற்று அடங்கினான் அமிர்து;*
*... ஆகவே செய்யின் அமிர்து''* *(சிறுபஞ். 2)*

*கற்புடைய பெண் தன் கணவனுக்கு அமிர்தம் போன்றவள் என்று வாழ்க்கைத் துணையின் சிறப்புப் பற்றி சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகின்றது.*

***"ஏவியது மாற்றும் இணங்கிளையும், காவாது***
***வைது எள்ளிச் சொல்லும் தலைமகனும், ...***
***... உறுதிஇலார்"*** ***(திரி. 49)***

*மனைவியைப் பாதுகாக்கும் திறனின்றி ஒரு கணவன் இகழ்ந்து பேசுவானாயில் இல்லறம் சிறக்காது. எனவே தன் மனைவியை பாதுகாக்கும் திறன் படைத்தவனாக கணவன் இருப்பது ஒரு சிறந்த வாழ்க்கைத் துணைக்கும் பொருந்தும் என்பதனை திரிகடுகம் குறிப்பிடுகின்றது.*

***"நகை இனிது ...***

***......................................***

***பெண் இனிது பேணி வழிபடின் - பண் இனிது***

***பாடல் உணர்வார் அகத்து"    ( நான்மணி. 39)***

*கணவன் வழி மேவும் மனைவியர் இன்பத்தை அடைவர் என்று நான்மணிக்கடிகை கூறுகின்றது. இவ்வாறு வாழ்க்கைத் துணையின் சிறப்புப் பற்றி முதுமொழிக்காஞ்சி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம், நான்மணிக்கடிகை போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.*

***மக்கட் பேற்றின் சிறப்பு***

*மக்கட்பேறு எனப்படுவது இனப்பெருக்கத்திற்கும் உலக நடப்புத் தொடர்ச்சிக்கும் இறைவன் வகுத்த இயற்கையான ஏற்பாட்டின் படியும் தத்தம் தொழில் தம்மை பேணும் பொருட்டும் தாம் இறந்த பின் தம் பெயரால் அறஞ் செய்யும் பொருட்டும் தம் பெயரை இவ்வுலகில் நிலவச் செய்தல் பொருட்டும் பிள்ளைகளைப் பெறுவதாகும். இவற்றை வள்ளுவர்,*

***"பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த***

***மக்கட்பேறு அல்ல பிற"*** *(குறள். 61)*

*குடும்பத்தில் நல்ல மனைவி அமைவது போல நல்ல மக்கட் பேறு அமைவதும் ஓர் வரமாகும். நாம் பெற்ற எல்லாம் செல்வத்தையும் விட மேலான செல்வம் அறிவுடைய மக்களைப் பெறுவதே ஆகும்.*

***"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்***

***பண்புடை மக்கட் பெறின்"*** *(குறள். 62)*

*ஒருவன் பண்புடைய மக்களைப் பெறும்பொழுது அவனை ஏழேழு பிறப்பும் தீய சக்திகள் தாக்காது என்பதே இதன் கருத்து.*

***"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்***

***தம்தம் வினையான் வரும்"*** *(குறள். 63)*

*ஒரு பெற்றோரின் உண்மையான செல்வம் மக்கட்ச் செல்வமே அச்செல்வம் பெற்றோர் செய்த நல்வினைப் பயனேயாகும் என்கிறார் வள்ளுவர். மேலும் மக்கட் செல்வத்தின் மூலம் பெற்றோர் பெறும் அளவில்லா இன்பநுகர்சிதனை,*

***"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்***

***சிறுகை அளாவிய கூழ்"*** *(குறள். 64)*

*தாம் பெற்ற குழந்தைகள் உண்ணும் போது அழகிய சிறிய கைகளை தம்மீது எறிந்து சிதறிய சோற்றுப் பருக்கைகள் தேவாமிழ்தத்தை விட இனிமை உடையதாய் கருதப்படுகிறது. அவ்வாறு சிதறிய சிதறல் பெற்றோருக்கு கோபத்தை உண்டாக்காமல் அமிழ்தம் உண்டது போன்ற இன்பத்தையே உண்டாக்கும் என்பதை வள்ளுவர் விளம்புகின்றார். மேலும்,*

***"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்***
***மழலைச்சொல் கேளா தவர்"*** *(குறள். 66)*

*அதாவது தாம் பெற்ற மக்கள் குழந்தைகளாக இருக்கும்போது பெற்றோரின் உடம்பைத் தொடுவதும் உதைப்பதும் பெற்றோருக்கு உடல் இன்பத்தை உண்டாக்கும். அதே போல் அவர்கள் உளறும் சொல் கேட்கும்போதே பெற்றோருக்கு செவி இன்பம் கிட்டும். எனவேதான் தன் பிள்ளைகளின் மழலைச் சொல்லை கேளாதோரே குழலோசையும் யாழோசையும் இனிது என்பர் என்று கூறிய வள்ளுவர் இதன் மூலம் ஒருவன் மக்கட்பேற்றின் மூலம் அடையும் பயன்களைக் கூறியுள்ளார்.*

*மக்கட்பேறு ஒருவனுக்கு கிட்டினால் மட்டும் போதாது. அவ்வாறு கிடைத்த மக்களை நாம் எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதனையும் வள்ளுவர் சுட்டுகின்றார்.*

***"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து***
***முந்தி இருப்பச் செயல்"*** *(குறள். 67)*

*ஒரு தந்தை தன் மகனுக்கு செய்ய வேண்டிய தலையாயக் கடமைகளுள் ஒன்று பெரியவர்கள் கூடியிருக்கும் ஒரு சபையில் தம் மக்களைப் பேரறிஞர் எனக் கூறப்படும் புகழ்மொழிக்கு உயர்த்துவதாகும் என்று கூறுகிறார்.*

***"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து***
***மன்உயிர்க்கு எல்லாம் இனிது"*** *(குறள்-68).*

*தம்மைவிட தம்மக்கள் கல்வி அறிவு நிரம்பியவர்களாக இருந்தால் அது உலக மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும். பெற்றோருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கும் என்று விளம்புகிறார்.*

***"ஈன்ற பொழுதிற் பெரிதுஉவக்கும் தன்மகனைச்***
***சான்றோன் எனக்கேட்ட தாய்"*** *(குறள். 69)*

*ஒரு தாய் தன் மகனை ஈன்ற பொழுது பெரும் மகிழ்வை விட அவனைச் சான்றோன் என பிறர் கூறக் கேட்கும்போது பெறும் மகிழ்வே அதிகம் என்று ஒரு தாயின் மகிழ்வினை எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். இவ்வாறு பெற்றோர் பிள்ளைகளை வளர்க்கும் விதம் பற்றி வள்ளுவர் விளம்பியுள்ளார்.*

***"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்***
***மக்கட் பேற்றின் பெறும் பேறு இல்லை"      (முதுமொழி. 6:1)***

*கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழும் மக்கட்கெல்லாம் மக்கட்பேற்றை விடச் சிறந்தபேறு வேறெதுவுமில்லை என்று மக்கட்பேற்றின் சிறப்பினைக் குறித்து முதுமொழிக்காஞ்சி கூறுகின்றது.*

***"படைப்பு பல படைத்துப்...***
***..................................................***
***மயக்குறு மக்களை இல்லோர்க்குப்***
***பயக்குறை இல்லை - நாம் வாழுநாளே"      (புறநா. 188)***

*அறிவே இன்பத்தால் மயக்கும் புதல்வரைப் பெறாதவர்க்கு இன்பமாகிய பயனும் இல்லை. வாழும் நாளும் இல்லை.அவ்வாழ்க்கை வெறுமை உடைய வாழ்க்கையே என்று மக்கட் பேற்றின் சிறப்பினை புறநானூறு எடுத்துக் கூறுகின்றது. இவ்வாறு மக்கட் பேற்றின் சிறப்புப் பற்றி முதுமொழிக்காஞ்சி, புறநானூறு நூல்கள் குறிப்பிடுகின்றன.*

**தொகுப்புரை**

- *'வள்ளுவர் காட்டும் மனைமாட்சி' என்ற கட்டுரையில் 'இல்லறம்' - என்பது இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு போன்றவற்றை உள்ளடக்கியது என்பதை எடுத்துரைத்தல்.*
- *இல்வாழ்க்கையின் சிறப்பு இல்லறத்தானின் கடமை, இல்லறத்தானின் வலிமை, இல்லறத்தான் தெய்வத்திற்கு சமம் என்பதனை எடுத்துரைத்தல்.*
- *ஒரு இல்லறத்தானுக்கு தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் துணையாக வரும் மனைவியின் வலிமை, மனைவியின் பெருமை, மனைவிற்கு அழகு தரும் பண்பு, கற்புடை மனைவியின் சிறப்பு போன்ற கருத்துக்களை எடுத்துக் கூறுதல்.*
- *ஒரு இல்லறத்தான் மக்கட் பேற்றின் மூலம் அடையும் பயன் மற்றும் சிறப்பு போன்றவற்றையும் தனக்கு கிடைத்த மக்கட்ச் செல்வத்தினை பெற்றோர் வளர்க்கும் விதம் பற்றியும் எடுத்துரைத்தல்.*

❖ இவ்வாறு ஒரு இல்லறத்தான் தன்னுடைய எல்லாக் கடமைகளையும் சரிவர செய்யும் போது 'இல்லறம்' நல்லறமாக அமைகிறது என்பதை எடுத்துறைத்தல்.

**துணைநூல் பட்டியல்**


1. திருக்குறள், எஸ். கௌரி மாரீஸ்வரி, சாரதா பதிப்பகம், சென்னை, 2002.
2. சிறுபஞ்சமூலம், இ. தமிழமுது, மாணவர் பதிப்பகம், சென்னை, 2014.
3. ஆசாரக்கோவை, வ.த. இராமசுப்பிரமணியம், செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2009.
4. திரிகடுகம், முனைவர் யாழ்.சு. சந்திரா, செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2011.
5. முதுமொழிக்காஞ்சி, இ. தமிழமுது, மாணவர் பதிப்பகம், சென்னை, 2014.
6. நான்மணிக்கடிகை, எஸ். கௌரிமாரீஸ்வரி, சாரதா பதிப்பகம், சென்னை, 2002.
7. புறநானூறு மூலம் உரையும், முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2004.